பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**17 02 2026** **TUESDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

**1)** சென்னை இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கு **63** ஆயிரத்து **246** கோடி ரூபாய் வரும் நிதியாண்டிற்கான தமிழக இடைக்கால பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2)** மாநிலத்தில் வேளாண் துறைக்கு **47** ஆயிரத்து **248** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3)** செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பமும், கல்வியும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

**4)** தேசிய நெடுஞ்சாலைகளையொட்டி பூ மரங்களை வளர்க்கும் தேனீக்கள் வழித்தடத் திட்டத்தை தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் அறிவித்துள்ளது.

**5)** பெங்களூரு மகளிர் டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஸ்ரீவள்ளி ராஷ்மிகா - மாயா ராஜேஷ்வரன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>

தமிழக அரசின் வரும் நிதியாண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையை, நிதியமைச்சர் திரு தங்கம் தென்னரசு இன்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார்.

சென்னை இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கு **63** ஆயிரத்து **246** கோடி ரூபாய் இடைக்கால பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும், பூந்தமல்லி — போரூர் — வடபழனி இடையேயான மெட்ரொ ரயில் போக்குவரத்து விரைவில் தொடங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

உள்துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறைக்கு **15** ஆயிரத்து **111** கோடி ரூபாயும், வறட்சி தடுப்புப்பணிகளுக்கு **110** கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் அறிவித்தார்.

போதைப்பொருள் நடமாட்டத்தை தடுக்க அரசு கடுமையான சட்டங்களை நிறைவேற்றி, நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறைக்கு **21** ஆயிரத்து **132** கோடி ரூபாயம், எரிசக்தித் துறைக்கு **18** ஆயிரத்து **91** கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அரசு போக்குவரத்துக்கழகத்துக்கு **12** ஆயிரம் புதிய பேருந்துகள் வாங்க **6** ஆயிரத்து **126** கோடி ரூபாய் இந்த இடைக்கால பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

குத்தம்பாக்கம் புதிய பேருந்து முனையம் விரைவில் பயன்பாட்டிற்கு வரும் என்றும் அவர் அறிவித்தார்.

சிறு-குறு தொழில்துறைக்கு ஆயிரத்து தொள்ளாயிரத்து **43** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் அறிவித்தார்.

**5** ஆயிரத்து **200** கோடி ரூபாய் செலவில் புதிய கப்பல் கட்டும் தளம் அமைக்கப்படும என்று அறிவிப்பையும் அமைச்சர் வெளியிட்டார்.

வீட்டு வசதித்துறைக்கு **7** ஆயிரத்து **547** கோடி ரூபாயும், பொதுப்பணித்துறைக்கு ஆயிரத்து **294** கோடி ரூபாயும் இடைக்கால பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக திரு தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

<<<<<>>>>>

தமிழக அரசின் வரும் நிதியாண்டிற்கான இடைக்கால வரவு-செலவு திட்டத்தில் வேளாண் துறைக்கு **47** ஆயிரத்து **248** கோடி ரூபாய்

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வேளாண் அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் வரும் நிதியாண்டிற்கான இடைக்கால வேளாண் பட்ஜெட்டை தாக்கல் செய்து பேசிய அவர், தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துவதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

மரங்கள் மற்றும் வனப்பரப்பினை 33 சதவீதம் உயர்த்துவதற்கும், பசுமை பரப்பினை அதிகரிக்கவும், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

மகளிர் ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ், தேனி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, முருங்கை சாகுபடி, கோழி வளர்ப்பு, சிறுதானிய உற்பத்தி, காளான் உற்பத்தி உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பண்ணை சார்ந்த நடவடிக்கைகளில் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் ஊக்குவிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

மீனவர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டமும் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

பால் உற்பத்தியை மேம்படுத்தவும், அதிகரிக்கவும் புதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

மாநிலத்தில் 3 லட்சத்து 30 ஆயிரம் டன் கொள்ளளவு கொண்ட 130 நவீன சேமிப்பு தளங்களுக்கான கட்டுமானப்பணிகள் தொடர்ந்து நடைபெறும் என்றும் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

<<<<<>>>>>

தமிழக சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண் நிதிநிலை அறிக்கையை வரவேற்றும், குறை கூறியும் பல்வேறு தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலர் திரு வீரபாண்டியன், தமிழக இடைக்கால பட்ஜெட்டை வரவேற்றுள்ளார்.

பெண்கள், மாணவர்கள், விவசாயிகளுக்கான நலத்திட்டங்களை தொடர்வதற்கு இதில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

வேளாண் துறைக்கு 47 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை வரவேற்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

தமிழகத்தின் கடன் சுமை அதிகரித்துள்ளதாகவும், வருவாய் பற்றாக்குறையை குறைப்பதற்கான எந்த நடவடிக்கையையும் மாநில அரசு எடுக்கவில்லை என்றும் பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பமும், கல்வியும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இந்திய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டின் இரண்டாவது நாளான இன்று உரையாற்றிய அவர், அறிவுசார் சமுதாயமாக இந்தியா உருவாகிக் கொண்டிருப்பதாக தெரிவித்தார்.

பன்முகத் தன்மை கொண்ட இந்தியாவின் வளர்ச்சிக்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் முக்கிய பங்காற்றும் என்று அவர் கூறினார்.

நாட்டின் பன்முக கலாச்சாரம், மக்களின் தேவை ஆகியவற்றை புரிந்துகொள்வதற்கு இந்த தொழில்நுட்பம் உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

உலகளாவிய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை இளைஞர்கள் முழுமையாக புரிந்துகொண்டு, ஆக்கப்பூர்வமான எதிர்காலத்திற்கு வழிவகுக்க வேண்டும் என்றும் திரு தர்மேந்திர பிரதான் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

தேசிய நெடுஞ்சாலைகளையொட்டி பூ மரங்களை வளர்க்கும் தேனீக்கள் வழித்தடத் திட்டத்தை தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் அறிவித்துள்ளது.

தேசிய நெடுஞ்சாலைகளின் அழகையும், சுற்றுச்சூழலையும் பாதுகாக்கும் நோக்கில், சாலையோரங்களில் பூ மரங்கள் இத்திட்டத்தின்கீழ், வளர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆணையத்தின் இந்த புதிய முயற்சிக்கு மத்திய சாலை போக்குவரத்து அமைச்சகமும் அனுமதி அளித்துள்ளது.

சாலையோரங்களில் வேம்பு, புங்கை, வாகை, நாவல் உள்ளிட்ட மரக்கன்றுகளை நட்டு பராமரிக்கப்படும்.

இந்த மரங்களின் பூக்களில் அதிக அளவில் தேன் இருப்பதை கருத்தில்கொண்டு, தேனீ வளர்ப்பு விவசாயிகளுக்கு உகந்த சூழ்நிலை ஏற்படுத்தித் தரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மரங்களிலிருந்து கிடைக்கும் விறகுகள் மூலம், அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கான வாழ்வாதாரம் மேம்படும்.

அதிக அளவு மரங்கள் பசுமை செழிப்பை உறுதி செய்து, மழைப்பொழிவுக்கு வழிவகுக்கும் என்றும் தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் கூறியுள்ளது.

<<<<<>>>>>

சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் சந்திப்பு நிகழ்ச்சி திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் உள்ள கனரக வாகன தொழிற்சாலை வளாகத்தில் இன்று நடைபெற்றது.

சென்னை ஒருங்கிணைந்த ரயில் பெட்டி தொழிற்சாலை பொது மேலாளர் திரு சுப்பராவ், இந்நிகழ்ச்சியையொட்டி கண்காட்சியை தொடங்கிவைத்தார்.

ராணுவ தளவாட உற்பத்தித்துறையினர், பெட்ரோலியம், விண்வெளித்துறை உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளில் உள்ள சிறு தொழில் நிறுவனங்கள் இதில் பங்கேற்றன.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற சென்னை பெட்ரோலியம் நிறுவனத்தின் தொழில்நுட்ப இயக்குநர் திரு வெங்கடேஷ், வளர்ச்சியடைந்த இந்தியா

என்ற இலக்கை எட்டுவதற்கு சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்களை ஊக்குவிக்கும் வகையில் இதுபோன்ற கண்காட்சிகள் அதிக அளவில் நடத்தப்பட வேண்டும் என்று கூறினார்.

***(Sound Byte — வெங்கடேஷ் - 37 Sec. )***

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்ட மீன் வளர்ப்பு மேம்பாட்டு முகமையின் ஊத்துக்காடு ஏரியின் மீன்பிடி உரிமம் பெறுவதற்கான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** என்ற இணையதள முகவரியினை காணலாம் என்று ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

---------------

நாமக்கல் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி தெரிவித்துள்ளார்.

-------------

தேனியில், தமிழக அரசின் உலகம் உங்கள் கையில் திட்டத்தின்கீழ், கல்லூரி மாணவ, மாணவியருக்கு விலையில்லா மடிக்கணினிகளை ஆட்சியர் திரு ரஞ்ஜித் சிங் இன்று வழங்கினார்.

----------------

ரயில்வே தேர்வு வாரியத்தில் குரூப்-D பதவிகளுக்கான தேர்வுக்கு கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நாளை மறுநாள் முதல் தொடங்கப்பட உள்ளதாக ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

பெங்களூரு மகளிர் டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஸ்ரீவள்ளி ராஷ்மிகா - மாயா ராஜேஷ்வரன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில், இந்த இணை, 6-1, 6- 3 என்ற செட் கணக்கில், Harshini — Vanshita இணையை வென்றது.

ஒற்றையர் பிரிவில் **Sahaja Yamalapalli,** வைஷ்ணவி **Adkar** ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<END>>>>>**